
உ

திரிமூர்த்திகளின் க்ஷேத்திரமான

# ஸ்ரீ உத்தமர் கோயில் வரலாறு

★



கோயிலின் கோபுரமும் விமானமும்

★

தேவஸ்தான வெளியீடு

1971

உ

# ஸ்ரீ உத்தமர் கோயில் வரலாறு

(திருக்கரம்பனூர்)

---

அறங்காவலர் குழுத்தலைவர்

**திரு. P. மருதமுத்து**

அறங்காவலர்கள்

**திரு. N. S. ராஜு பிள்ளை**

**திரு. S. V. திருஞானம் பிள்ளை**

**திரு. M. ராஜு**

நிர்வாக அதிகாரி

**திரு. D. புருஷோத்தமன்**

ஆகியோர்களால் வெளியிடப் பெற்றது.

**ஆறும் பதிப்பு**


1971

[உரிமை செய்யப்பெற்றது]

## கோயில் விளக்கம்

கோயில் — உத்தமர்கோயில், திருக்கரம்பனூர்.
இடம் — பிக்ஷாண்டார்கோயில்
மூலவர் — திருமால் — புருஷோத்தமர்
தாயார் — பூரணவல்லி
சிவபெருமான் — பிக்ஷாடனர்
அம்மன் — சௌந்தர பார்வதி
தீர்த்தம் — கதம்பதீர்த்தம் — கொள்ளிடநதி
மரம் — கதம்பமரம்
விமானம் — உத்தியோக விமானம்


திருச்சிராப்பள்ளி ஜில்லா — லால்குடி தாலூகாவில் கொள்ளிட நதிக்கு வடகரையில் திருச்சி — லால்குடி ரயில் வண்டிப் பாதையில், உத்தமர் கோயில் ரயில் நிலையத்துக்குக் கிழக்கில் இக்கோயில் உள்ளது. பஸ் மார்க்கமாகவும் வரலாம். 108 திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. இது பிரமன், திருமால் பிக்ஷாடனர் என்னும் திரிமூர்த்திகளும் எழுந்தருளியுள்ள தலம்.



ஸ்ரீ வேணுகோபாலன் சந்நிதி



பிரமன்



திருமால்



பிக்ஷாடனர்

# ஸ்ரீ உத்தமர் கோயில் வரலாறு

—★★—

"யானும் தானா யொழிந்தானை
யாதும் யாவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனு
மாகிப் பணைத்த தனி முதலைத்
தேனும், பாலும் கன்னலும்
அமுதுமாகித் தித்தித்து என்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை, யுணர்ந்தேனே,"

(திருவாய்மொழி)

## 1. கோயிலும் இருப்பிடமும்

ஆதி அந்தங்கடந்த பரம் பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி இப் பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திரு மேனி கொண்டு எழுந்தருளியிருந்து, தன்னை வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகின்றான், அத்தகைய சிறந்த இடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும்

பால் மறைந்திருந்தபோதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக் கல்லின் (lens) மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களிலுள்ள மூர்த்தி களின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அருள் செய்வான். ''இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணுத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவது போல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே.''

மேலும் பரம்பொருளாகிய இறைவனுக்கு பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்னும் ஐந்துவகை நிலைகள் உண்டு. இவற்றுள் பரத்வமாவது பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. வியூகமாவது திருப்பாற் கடலில் எழுந்தருளியிருக்கும் நிலை. விபவம் என்பது ராமகிருஷ்ணுதி அவதாரங்கள். அந்தர்யாமித்வம் என்பது சராசரப் பொருள்களாகிய இயங்கும் பொருள்கள்—இயங்காப் பொருள்கள் எல்லாவற்றுள்ளும் எள்ளினுள் எண்ணெய்போல் மறைந்திருப்பது அடியார்களின் மனதில் வீற்றிருத்தலும் இதில் அடங்கும். அர்ச்சை என்பது விக்ரக ரூபங்களில் ஆவிர்ப்பவித்தல். ''வைகுந்த மேற்கொண்டிருந்தோர் வடி வைந்தின் வாழுமிடம்'' என்று பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுகிறுர். இந்த ஐந்துவகை நிலைகளில் அடியார்களுக்குக் காட்சிக்கெளிதாய், கோயிலில் உள்ள மூர்த்திகளில் அருட் கோலத்துடன் விளங்குவதாகிய அர்ச்சை நிலையே சிறந்ததாகக் கூறுவர் சான்ரேர்.

''செய்ய பரத்துவமாய்ச் சீரார் வியூகமாய்
துய்ய விபவமாய்த் தோன்றிவற்றுள்—எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிதென்ருன்
பன்னு தமிழ்மாறன் பயின்று.''

(திருவாய்மொழி நூற்றந்தாதி)

"நீடியமால் நின்ருன் இருந்தான் கிடந்தான்" என்ற படி இந்த அர்ச்சை நிலையில் பெருமாள் நின்ற திருக்கோலம், அமர்ந்த திருக்கோலம், பள்ளிகொண்ட திருக்கோலங்களைக் கொண்டு ஆங்காங்கு எழுந்தருளியுள்ளார். இத்தலத்தில் மூலவர் கிடந்த திருக்கோலத்திலும் உற்சவர் நின்ற திருக்கோலத்திலும் காட்சி தருகிருர்கள்.

ஆதலின் பெறுதற்கரிய மக்கட் பிறப்பைப் பெற்றவர் அனைவரும் பரம்பொருளாகிய இறைவனை அன்பினுல் வழிபட்டு அவன் வகுத்த நன்னெறியில் ஒழுகி அவனருளைப் பெற முயலுதல் உரிய கடமையாகும்.

தென்னுடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள், வைணவக் கோயில்கள், முருகன் கோயில்கள் முதலாயின. அவைகளுள் பிரமன், திருமால், பிட்சாடனர் என்னும் திரிமூர்த்திகளும் ஒருங்கே அமையப் பெற்ற கோயில் உத்தமர் கோயில் என்னும் திருப்பதியாகும். திருமாலுக்குரிய 108 திருப்பதிகளுள் இது திருக்கரம்பனூர் என்று வழங்கும். திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது.

**உத்தமர்**

பேரானைக் குறுங்குடியெம் பெருமானைத் திருத்தண்கால்
ஊரானைக் **கரம்பனூ ருத்தமனை** முத்திலங்கு
காரார் திண்கடலேழு மலையேழிவ் வுலகேழுண்டும்
ஆராதென் றிருந்தானைக் கண்டது தென்னரங்கத்தே

**—திருமங்கையாழ்வார்**

சிலமா தவம் செய்துந் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்து—முலகிற்
பரம்பநூல் கற்றும் பயனில்லை நெஞ்சே
**கரம்பனூர்** உத்தமன்பேர் கல்.

**—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்**

கங்கையிற் புனிதமாகிய காவிரி நதிபாயும் சோழநாட்டில் திருச்சிராப்பள்ளி ஜில்லா, லால்குடி தாலூகாவில் கொள்ளிடத்திற்கு வட கரையில் இத்தலம் உள்ளது. இக்கோயில் திருச்சிராப்பள்ளி—விழுப்புரம் கார்டுலைன் (Chord line) இருப்புப் பாதையில் உத்தமர் கோயில் என்ற ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கில் ½ பர்லாங்கு தூரத்திலும், திருச்சிராப்பள்ளிக்கு நான்கு மைல் தூரத்திலும், சேலம் ரஸ்தாவை ஒட்டியுள்ளது. உத்தமர் கோயில் ரயில்வே ஸ்டேஷனில் எல்லா ரயில் வண்டிகளும் நிற்கும். ரயில் வழியேயன்றி மோட்டார் வழியாகவும், வண்டி மூலமாகவும், திருச்சி, ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் முதலிய பல இடங்களிலிருந்தும் சேவை செய்பவர்கள் எளிதில் வரக்கூடும். இவ்வாலயத்துக்குச் சமீபத்தில் கொள்ளிட நதியும், ஐயன் வாய்க்காலும், கதம்ப தீர்த்தமும் (குளம்) இருக்கின்றன. ஆதலால் எப்பொழுதும் ஜல வசதிக்குக் குறைவேயில்லை.

திருக்கோயில் கடல் மட்டத்திற்கு 214 அடி உயரத்தில் இருக்கிறது. இவ்வூரில் வீடுகள் சுமார் 618-ம் ஜனத்தொகை சுமார் 3000-மும், தபால் நிலையமும் உள்ளன. இக்கோயிலில் கல்யாணங்களும் நடைபெறுகின்றன. கல்யாணத்தை நடத்த வருகின்றவர்கள் தங்குவதற்கு வசதியான புது விடுதியும் உள்ளது. கல்யாணங்கள் செய்பவருக்கு வேண்டிய வசதிகள் தேவஸ்தானத்தில் செய்து கொடுக்கப்படுகின்றன. இவ்வாலயத்தில் மின்சார விளக்குகள் போடப்பட்டிருப்பதால் யாவருக்கும் சௌகரியமாக இருக்கிறது. தல விருக்ஷம் கதம்ப மரம்.

## 2. கோயிலின் அமைப்பு

இத்தலம் இயற்கை அழகும், கலை அழகும் பொருந்திய இடம். கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. உள்ளே சிறிய கோபுரம் அமைந்தது. உத்தமர் சந்நிதி கிழக்கு நோக்கியும், சிவன் கோயில் மேற்கு நோக்கியும் உள்ளன.

இத்திருக்கோயிலில் இரண்டு பிராகாரங்கள் உள்ளன, இத்திருக்கோயிலைச்சுற்றி நாற்புறமும் கருங்கல்லால் கட்டப் பட்ட திருமதில் உண்டு.

இதன் கிழமேல் நீளம் 224 அடிகளும், தென்வடல் அகலம் 140 அடிகளும் உள்ளன. இத்திருமதிலுக்கு வெளியில் இருக்கும் பிராகாரத்தில் குளிர்ந்த நிழல் தரும் அழகிய தென்னஞ் சோலைகளும், நீரோடைகளும், தென் புறத்தில் ஐயன் வாய்க்காலும், எதிரில் பதினறுகால் மண்டபமும், பசுமடமுமிருக்கின்றன. கோயிலைச்சுற்றி நன்செய் நிலங்கள் இருப்பதால் கோயில் கம்பீரமான தோற்றத்தோடு விளங்கு கிறது. வெளிப்பிராகாரத்தில் உற்சவ காலங்களில் உற்சவ மூர்த்திகள் புறப்பாடும் தேரோட்டமும் நடைபெறும். கோயி லுக்குள்ளிருக்கும் பிராகாரத்தில் சுற்றுக்கோயில்களும், பகவானுடைய பூஜை நைவேத்தியத்திற்கென அமைந்துள்ள மடைப்பள்ளிகளும் உள்ளன.

---

## 3 தலத்தின் வேறு பெயர்கள்

இத்தலம் உத்தமர் கோயில் என்றும், திருக்கரம்பனூர், பிக்ஷாண்டார் கோயில், நீப க்ஷேத்திரம், கதம்பவனம், திரிமூர்த்திகள் க்ஷேத்திரம், ஆதிமாபுரம் எனவும் பெயர் பெறும். கதம்ப மஹரிஷிக்கு திருமால் பிரத்யக்ஷமான தால் திருக்கரம்பனூர் என்றும், ஈசுவரன் பிக்ஷாடன மூர்த்தியாக இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பதால் பிக்ஷாண்டார் கோயில், பிச்சையூர் என்றும், பிரம்ம தேவனைத் திருமால் தனது நாபியில் வைத்துக் கொண்டு இத்தலத்தின் தேவதையாக அமர்ந்திருப்பதால் ஆதிமாபுரம் என்றும், பிரம்மபுரம் என்றும், இத்தலத்தில் முன்காலத்தில் நீப விருக்ஷங்கள் நிறைந்து வனமாகவிருந்ததால் நீபவனம் (கதம்பவனம்) என்றும், பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் ஓர் ஆலயத்தில் எழுந்தருளியிருப்பதால் திரிமூர்த்தி க்ஷேத்திர மென்றும் பெயர்கள் வழங்கலாயின. கல்வெட்டுக்களில் திருக்கரம்பந்துறை, குணசீலமங்கலம் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. இவ்வூர்ப் பகுதி ராஜராஜவளநாடு என்று வழங்கியதாகத் தெரியவருகிறது.

## 4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் மஹாவிஷ்ணுவுக்குப் புருஷோத்தமர், உத்தமர் என்றும், தாயாருக்குப் பூர்ணவல்லி (பூர்வா தேவி) என்றும், சிவபெருமானுக்குப் பிக்ஷாடன மூர்த்தி என்றும், அம்பாளுக்குச் சௌந்தர பார்வதி என்றும் திருநாமங்கள் வழங்கப்பெறுகின்றன. இக்கோயிலில் இதன் பெயருக்கேற்ப பிரம்மா, ஸரஸ்வதி சந்நிதிகளும் அமைந்திருக்கின்றன. உத்தமர் என்பது சிவபெருமானுக்கும் பொருந்தும்.

அன்பர்கள் வழிபாடு செய்தற்கு எளிதாகவிருக்குமாறு தெய்வத் தன்மையை மறைத்து, சௌலப்யத்தைப் பொலிவுறச் செய்வதற்கே அர்ச்சாவதார சந்நிதானமாதலாலும், தானும் திருமகளும் அழிவில்லாமல் சகல உயிர்களையும் காப்பாற்றி




பிக்ஷாடனர்

வருவதாலும், சகல குணங்களிலும் மேம்பட்டு விளங்குவதாலும் எம்பெருமானுக்கு உத்தமர் என்ற திருநாமம் பொருந்தியிருக்கின்றது. சிவபிரான் பிக்ஷாடன மூர்த்தியாய் இங்கு உறைந்திருப்பதால் பிக்ஷாடன மூர்த்தி என்று பெயர் பெறுவர். இத்தலத்திற்குப் பிக்ஷாடன கோலத்தோடு வரும்பொழுது, கருணை வள்ளலான புருஷோத்தமர் பிராட்டியாரைக் கடாக்ஷிக்க, அப்பிராட்டியார் இட்ட பிக்ஷையில் பிரம கபாலமான அப்பிக்ஷா பாத்திரம், பூரணமாக நிரம்பப் பெற்றமையின் பிராட்டியாருக்குப் பூரண வல்லி என்ற திருநாமம் ஏற்பட்டது. சிவபெருமானுடைய தேவி அழகான வடிவத்தோடு எழுந்தருளியிருப்பதால் சௌந்தர பார்வதி என்று பெயர் வழங்கலாயிற்று.

## 5. தீர்த்தங்கள்

இக் கோயிலுக்கு அரை பர்லாங்கு தூரத்தில் கிழக்கில் கதம்ப தீர்த்தமும், தெற்கில் ஐயன் வாய்க்காலும், கொள்ளிடம் நதியும் தீர்த்தங்களாக உள்ளன. அவற்றிலிருந்து திருமஞ்சன —நீர் கொண்டுவரப்படுகிறது. கோயிலுக்குள் தென் பிராகாரத்தில் ஒரு கிணறு உள்ளது. கோயிலுக்கு வடபுறத்தில் பிரகலாத தீர்த்தமும், பத்ம தீர்த்தமும், தெற்கில் பிரம்ம தீர்த்தமும் இருந்தனவாகத் தெரிகிறது. இவை தற்போது காணப்படவில்லை. கோயிலைச் சுற்றிலும் சின்னஞ்சிறு வாய்க்கால்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இக்கோயில் நீர்வளம் பொருந்திய இடம்.

## 6, தலப் பெருமைகள்

இத்தலம் இயற்கை வளமுள்ள இடத்தில் அமைந்துள்ளது. சுற்றிலும் வயல்களும், தோப்புக்களும், சிற்றோடைகளும் சூழ்ந்துள்ளன. பிரமன், திருமால், பிக்ஷாடனர் ஆகிய மும் மூர்த்திகளும் காட்சிதரும் கோயில். சமய வெறுப்பில்லாமல் சமரச நோக்குடன் வழிபாடு செய்வதற்குரிய தலம். கங்கையிற் புனிதமாகிய காவிரியின் பிரிவான கொள்ளிடக் கரையின் வடபால் அமைந்துள்ளது. இக்கோயிலின் விமானம் உத்தியோக

விமானம் எனப்படும். மூலமூர்த்தி பள்ளிகொண்ட பெருமாளின் வடிவம் சிலையினாலாகியது. நல்ல சிற்பம். ஒரு காலத்தில் இக்கோயிலின் திருவாயிலுக்கு கதவில்லாமல் இருந்து பெருமாளை எப்போதும் சேவை செய்வதற்குச் சௌகரியமாயிருந்ததாகத் தெரிய வருகிறது. "வழிக்கரையில் திருவாசலுக்கு ஒரு கதவிடாதே வந்து கிடக்கிறவனைச் சேவிப்பார் மிகுதியாலே கதவிட அவசரமில்லை" என்று பெரிய வாச்சான் பிள்ளை ஓரிடத்தில் கூறியிருப்பதாகத் தெரிகிறது. இவ்விடத்தில் திருமணங்கள் மிகுதியாக நடைபெறுகின்றன.

இத்தலத்தில் பிரமன், மார்க்கண்டேயர், ஜனகர், திக்குப் பாலகர்கள், கருடன், தேவர்கள், சத்கீர்த்தி வர்த்தனன் முதலியோர் வழிபட்டுப்பேறுபெற்றனர். இக்கோயிலில் புருஷோத்தமர் சந்நிதியின் மூலஸ்தானத்தை ஒட்டியே பிக்ஷாடனர் சந்நிதி தென்புறத்திலும், தசரதலிங்க சந்நிதி வடபுறத்திலும் இருக்கின்றன. இந்தக் கோயில் சார்பில் புத்தகசாலை ஒன்றும் இருந்து வருகிறது.

இக்கோயிலை வழிபடுவோர் வலம் வரும்போது மூன்று சந்நிதிகளையும் சேர்த்து வலம் வரவேண்டும், மதவெறுப்பு கூடாதென்பதற்காகவே இப்புனித தேவாலயத்தைப் பெரியோர் நிர்மாணித்தனர் போலும்.

Bikshandarkoil:—Four miles north of Trichinopoly on the north bank of Coleroon and one mile east of Srirangam. Population 2143. It's fortified Pagoda took a prominent part in the fighting between the English and French round Trichinopoly. In 1751 when captain Gingen was retreating on Trichinopoly, he occupied it temporarily and it was subsequently garrisoned by the enemy. The temple is of religious interest as in the worship of Brahma, Vishnu and Siva is united.

(Trichinopoly Dist. Gazetteers)

## 7. சுற்றுக் கோயில்கள்

இவ்வாலயத்திற்குக் கீழ்புறத்தில் ஒரே ஒரு கோபுர வாயில்தான் உண்டு. இதன் வழியாக உட்சென்றால் துவஜ ஸ்தம்பத்திற்கு மேற்கிலுள்ள மஹா மண்டபத்தில் கருடாழ்வார் சந்நிதியும். கிழக்குமுகமாய் ஸ்ரீ புருஷோத்தமர் சந்நிதியும், ஸ்ரீ ஆண்டாள் சந்நிதியும் இருக்கின்றன. இம்மண்டபச் சுவரில் துதிப்பாடல்கள் அமைந்த சலவைக்கல் பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளது. உள் பிராகாரத்தில் வலமாகச் சுற்றிவரும்பொழுது இம் மஹா மண்டபத்திற்குத் தெற்கில் ஸ்ரீ பூரணவல்லித்தாயார் சந்நிதி கிழக்கு முகமாகப் பார்த்துக் காணப்படுகிறது. இச் சந்நிதியைச் சுற்றிச் சிறிது மேற்கில் சென்றால், கதலி விருக்ஷம் இருக்கிறது. இதற்குக் கிழக்கிலுள்ள கருங்கல் சுவரில் மிகப் பழமையான கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கதலி விருக்ஷத்திற்கு மேல்புறம் மண்டபமும், அதில் ஸ்ரீ தெக்ஷிணமூர்த்தி, ஸ்ரீ பிக்ஷாடனேஸ்வரர் சந்நிதிகளும் இருக்கின்றன. இச்சந்நிதிகளுக்கு மேற்கில் சித்தி விநாயகர் சந்நிதியும், அங்கிருந்து மேற்குப்புறம் சென்றால் ஈசுவரர் சந்நிதியும் தெற்குவாயிற்படியுமிருக்கின்றன. இதற்கு மேல் புறம் உள்ளது கல்யாண மண்டபம். இம் மண்டபத்தில் ஸ்ரீ லக்ஷ்மிநாராயணர், ஸ்ரீராமர் சந்நிதிகளுமிருக்கின்றன. இவ்விடமிருந்து வடபுறம் திரும்பி வெளி நந்தி தேவரைத் தரிசித்து உள்ளே சென்றால் மேற்கு முகமாய் இருக்கும் ஸ்ரீ பிக்ஷாடனேஸ்வரர் மூலஸ்தானத்துக்குச் செல்லலாம். உள்ளே சென்றதும் மஹாமண்டபத்தின் வலது பக்கத்தில் விநாயகர், இடது பக்கத்தில் ஸ்ரீ சுப்பிரமணியர் சந்நிதிகள் இருக்கின்றன. ஸ்ரீ சுப்பிரமணியர் சந்நிதிக்கு வடபுறம் தெற்கு முகமாக ஸ்ரீ சௌந்தர பார்வதியம்மன் சந்நிதியும், நவராத்திரி மண்டபமும் இருக்கின்றன. துவார பாலகர் வாயிற் படிக்குட் சென்றால் நடராஜர் சந்நிதி

இருக்கிறது. வெளி நந்தி தேவருக்கு மேல்புறம் ஈசுவரர் உத்ஸவ மண்டபமும், நந்தவனமும் இருக்கின்றன. இவ்விடமிருந்து வடபுறமாகச் சென்ருல் வடமேற்கில் ஸ்ரீ வேணுகோபாலன் சந்நிதியைக் காணலாம். அங்கிருந்து கீழ்புறம் திரும்பிச் சென்ருல் வலது புறத்தில் நவக்கிரஹங்கள், ஸ்ரீ சண்டிகேஸ்வரர் சந்நிதிகள் இருக்கின்றன. இவைகளுக்குக் கீழ் புறத்தில் ஸ்ரீ தசரதலிங்க சந்நிதி சிறு ஆலயமாக அமைந்துள்ளது. தசரதலிங்க சந்நிதிக்கு வடபுறம் பிராகாரத்திலிருந்து கிழக்கில் சென்ருல் ஆழ்வார்கள், பிரம்மா, ஸரஸ்வதி சந்நிதிகள் இருக்கின்றன. நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார், ராமானுஜர், மணவாளமாமுனி, சேனை முதலியார் சந்நிதிகளில் உற்சவச்சிலைகளும் உள்ளன,

## 8. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப்போது ஆவன செய்ய வேண்டும்.

புதியதோர் கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும், பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர்.

மாதவர் மடங்களாதிவரதன் மந்திரங்களாதி
நாதமா மிலிங்கமாதி நளினபுட்கரணியாதி
சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க்குறுபலன்தான்
ஓதுமுன் செய்தோர்தம்மில் ஆயிரங்குணிதமோங்கும்.

(சிவபுண்ணியத் தெளிவு)

புல்லினுல் வருடங்கோடி புதுமண்ணுல் பத்துக்கோடி
தெள்ளிய செங்கலாலே செய்தபேர் நூறுகோடி
அல்லியங் கோதைபாகற் காலயம் மடாலயங்கள்
கல்லினுற் செய்தபேர்கள் கைலை விட்டகலார் தாமே,

இக்கோயிலில் அவ்வப்போது பல திருப்பணிகள் நடந்து வந்திருக்கின்றன. ஈசுவரன் கோயில் அம்மன் கோயில் விமானங்கள் பழையனவாயிருந்தன. அவற்றைப் பழுது பார்த்து தாமிரக் கலசங்கள் அமைக்கப்பெற்று 1939-ம் ஆண்டில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 1948-ல் பெருமாள் கோயிலுக்கும், மற்ற பரிவார தேவதைகளுக்கும் விமானங்களைப் புதுப்பித்துத் தாமிரக் கலசங்கள் அமைத்தும், மற்ற திருப்பணிகள் செய்தும் 8—7—48-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்புனிதமான கைங்கரியத்திற்குப் பிக்ஷாண்டார் கோயில் மிராசுதாரான காலஞ்சென்ற ராவ்பகதூர் G. ராஜகோபால் பிள்ளை அவர்களும், கூத்தூர் மிராசுதாரான காலஞ்சென்ற ராவ்பகதூர் ஸ்ரீ M. C. S. அனந்த பத்மநாப ராவ் அவர்களும் பலவித உதவி புரிந்தனர். மேலும் ஸ்ரீ ராவ் அவர்கள் இக்கோயிலில் கல்யாணம் செய்பவர்கள் உபயோகத்திற்காகத் தளிகை செய்வதற்குரிய பாத்திரங்களும், விசுவரூபம் அபிஷேகம் இவற்றிற்குப் பாலுக்காக நல்ல பசுவும் வாங்கிக் கொடுத்திருக்கிறார். ஸ்ரீரங்கம் ஸ்ரீ M. S. ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் (Retired Assistant Engineer) ஜனங்களுக்கு சுகாதார முறைப்படி பயன்படுவதற்குரிய ஒரு தண்ணீர்க் குழாய் அமைத்திருக்கின்றார்.

கதம்ப தீர்த்தம் (குளம்) தேவகோட்டை ஸ்ரீ K. அண்ணாசாமி அய்யங்கார் அவர்கள் செய்த பொருளுதவியைக் கொண்டு திருப்பணி செய்து செம்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. கொத்தமங்கலம் ஸ்ரீ ராம. சு. ராம. ராமன் செட்டியார் அவர்கள் இரண்டு ரிஷப வாகனங்கள் செய்து கொடுத்துள்ளார். திவான் பகதூர் ஸ்ரீ R. சுந்தராச்சாரியார் அவர்களால் ஸ்ரீ ராமர் சந்நிதி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர சில புதிய திருப்பணிகளும் செய்யப்பட்டுள்ளன. பிரமோத்ஸவ மண்டபத்திலும், பதினாறு கால் மண்டபத்திலும் கீழ் தள வரிசையை உயர்த்தி சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. கோயிலுக்குள் இருள் மூடிக்கிடந்த இடங்களில், காற்றும்,

வெளிச்சமும் அதிகரிக்கும் வகையில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. சிவபெருமான், அம்மன் சந்நிதிகளில் திருவாசிகை விளக்குகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. காலஞ்சென்ற திருச்சி வக்கீல் R. ஸ்ரீனிவாசய்யர் அவர்களால் புதிய பிக்ஷாடனர் — உற்சவமூர்த்தி 1945-ம் வருஷத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. சமீபத்தில் இரண்டு பெரிய துவார பாலகர்களின் சிலைகள் புதிதாய்ச் செய்யப்பெற்று முன் சந்நிதியில் நிறுத்தப் பெற்றுள்ளன.

## புதிய திருப்பணிகள்.

**திருத்தேர்:** இக்கோயிலுக்குத் தனித்தேர் இல்லாமலிருந்து கோயில் நிதியிலிருந்து மரத்தேர் செய்யப்பட்டது.

**போக சத்தியம்மன்:** சிவன் கோயில் அர்த்த மண்டபத்தில் போகசத்தியம்மன் இல்லாமலிருந்து சுமார் ரூ. 400 மதிப்புள்ள பஞ்சலோகத்தாலான புதிய சிலை 6—9—57ல் பிரதிஷ்டை செய்யப்பெற்றது.

சிவபெருமானுக்கு அருளே சக்தியாகும். அருளின்றிச் சிவமில்லை. சிவமின்றிச் சக்தியுமில்லை. "அருளது சக்தியாகும் அரன் தனக்கு அருளையின்றித் தெருள் சிவமில்லை. அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை" என்னும் ஆன்றோர் மொழிப்படி சிவம் சக்தி இரண்டையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க இயலாது. இதை உணர்த்தவே அம்மன் கோயில் தனியே இருந்தாலும், சிவலிங்கத்துக்குப் பக்கத்தில் அர்த்த மண்டபத்தில் போக சக்தியம்மன் சிலை நிறுவப்பெற்றுள்ளது.

**கல்யாண விடுதி:** கோயிலுக்கு வந்து கல்யாணம் செய்து கொள்பவர்களின் சௌகரியத்துக்காக கோயிலுக்கு வெளியே வடபுறத்தில் கோயில் நிதியிலிருந்து 14000 ரூபாய் செலவு செய்து 50 அடி நீளம், 40 அடி அகலமுள்ள கெட்டி மெத்தைக் கட்டிடம் கட்டப்பெற்று 8—9—57ல் திறக்கப்பெற்றது.

25—9—58-ல் வாகனங்கள் வைப்பதற்குப் புதிய மண்டபம் திறக்கப்பெற்றது. 2—5—59-ல் மூலவருக்கு வெள்ளி நாகா பரணமும், பிரமனுக்கு வெள்ளிக் கவசமும் சாத்தப்பெற்றன.

25—3—60-ல் தண்ணீர்க் குழாயும், தண்ணீர்த் தொட்டியும் அமைக்கப்பெற்றன. 2—4—61-ல் பெருமாள், தாயார், பிரம்மா முதலிய மூர்த்திகளுக்குத் திருவாசிகைகள் அமைக்கப் பெற்றன. மேலும் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி. மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் மூலவர் சிலைகளும், திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் உற்சவ மூர்த்திகளும், 2—4—61-ல் அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் திரு. A. உத்தண்டராம பிள்ளை, B.A.,B.L. அவர்களால் பிரதிட்டை செய்யப்பட்டன. பஞ்சபுராணத்துக்குரிய திருமுறைப் பாடல்கள் அடங்கிய கல்வெட்டுச் சிலையையும், திருமுறைத் திருக்கோயிலையும் 2—4—61-ல் ஆணையர் அவர்கள் திறந்துவைத்தார்கள். புதிதாய்ச் செய்யப்பெற்ற திருப்பணிகளால் கோயிலுக்கு வருபவர்கள் கோயிலில் தரிசனம் செய்வதற்கும், கோயிலில் தங்கி வேண்டிய சௌகரியங்கள் பெறுவதற்கும் நலம் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்களால் கொடுக்கப்பட்ட நூல் நிலையம் கோயிலில் உள்ளது.

## 9. ஆபரணங்களும், வாகனங்களும்

இக்கோயிலுக்குச் சுமார் 7000 ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்களும், 1000 ரூபாய் மதிப்புள்ள வாகனங்களும் இருக்கின்றன.

## 10 சொத்துக்களும், வருமானமும்

திருச்சிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலூகா பிக்ஷாண்டார் கோயில், தாளைக்குடி, ஈஞ்சூர் கிராமங்களில் நன்செய்

நிலமும், மா, தென்னை தோப்புக்களும் இருக்கின்றன. இவைகள் மூலமாய் ஆண்டுதோறும் சுமார் நாற்பதாயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கின்றன, சர்க்கார் மோகினித் தொகை ரூபாய் 212-14-8-ம் கிடைக்கிறது. கல்யாண வருமானம், உபயம், காணிக்கை வகை மூலமாயும் ரூபாய் ஐயாயிரம் வரும். ஆலயத்துக்கு வழிபடவரும் தேசாந்திரிகளுக்காகப் பிரசாதத்திற்குக் கட்டளை ஏற்பட்டிருக்கிறது.

இக்கோயிலில் திருமணங்கள் நடத்துவது விசேஷமாகக் கருதப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 600 கல்யாணங்கள் நடைபெறுகின்றன கல்யாணத்திற்காக கோயில் விடுதியில் இரண்டு நாட்கள் தங்கவும், பாத்திர வசதிகள், தண்ணீர், மின் விளக்கு முதலிய வசதிகளைப் பெறவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. பின்கண்டபடி கட்டணங்கள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன.

## கட்டண விபரங்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. கோயிலுக்குள் கல்யாணம் செய்பவர்களுக்கு தனி மேளம் இல்லாமல் சீட்டு 1க்கு | ... | ரூ. | 13-00 |
| 2. பழைய கல்யாண மண்டபம் வாடகை நாள் 2-க்கு சகல வசதிகளுடன் ... | ... | ரூ. | 125-00 |
| 3. புதிய கல்யாண மண்டபம் வாடகை நாள் 2-க்கு சகல வசதிகளுடன் ... | ... | ரூ. | 150-00 |
| 4. சஷ்டியப்த பூர்த்தி 1-க்கு | ... | ரூ. | 13-00 |
| 5. உபநயனம், சீமந்தம், வளைகாப்பு வகையரு ஒவ்வொன்றுக்கும் | ... | ரூ. | 16-00 |

## அர்ச்சனை சீட்டும் பிரசாதமும்

| | | | |
|---|---|---|---|
| சகஸ்ரநாமம் சீட்டு 1-க்கு | ... | ரூ. | 1-25 |
| அஷ்டோத்திரம் சீட்டு 1-க்கு | ... | ரூ. | 0-25 |

பிரசாதங்கள் விலை விபரம்:

| | |
|---|---|
| வடை | 0-15 |
| அரவணை | 0-60 |



சமயகுரவர்—நால்வர்

## 11. சந்நிதிகளின் பூஜா காலங்கள்

இக்கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆக நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நியமந் தவறாது நடைபெறுகின்றன. இவை தேவஸ்தான கட்டளையாகவே நிகழ்கின்றன. இது தவிர காலையில் விஷ்ணு சந்நிதியில் விசுவரூப சமயத்தில் கோ ஸேவையும், பஞ்சாங்க சிரவணமும் நடந்து வருகின்றன. பூஜை நேரங்களில் பெரிய மணி அடிக்கப்படும். அந்த நேரங்களில் சென்று வழிபடுவதால் மிக்க புண்ணியம் உண்டு.

''காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்.'' (சிவதரிசன மகத்துவம்)

''வினையால் அடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக் கண்செல்லார்—நினைதற்
கரியானைச் சேயானை ஆயிரம் பேர்ச் செங்கண்
கரியானைக் கைதொழுதக்கால்.'' (பொய்கையாழ்வார்)

மேலும் பிரதோட காலத்திற் சென்று இறைவனை வழிபடுதல் மிகவும் விசேடம். பிரதோடகாலமாவது வளர் பிறையிலும், தேய்பிறையிலும் வரும் திரயோதசி திதி நாட்களில் சூரியன் மறைவதற்கு முன்னுள்ள மூன்றே முக்கால் நாழிகையும், பின்னுள்ள மூன்றேமுக்கால் நாழிகையும் கொண்ட காலம். சிவபெருமான் ஆலகால விஷம் உண்டருளிய நேரம் என்பர்.

''வாழிய இருபக்கத்தும் வளர்திரயோதசிக்கண்
ஆழியிற் கதிரோன்வீழும் அதற்குமுன் மூன்றேமுக்கால்
நாழிகை பின்னுமந்த நாழிகை இனையகாலம்
பாழியங் கடல் சூழ்வைப்போர் பகர் பிரதோடம் என்பார்.''
(மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை)

## 12. திருக்கோயில் விழாக்கள்

விஷ்ணு கோயிலில் சித்திரை மாதம் சித்ரா பூர்ணமி தினத்தை இறுதியாகக் கொண்டு பிரம்மோத்ஸவமும், ஆனி மாதம் ஜ்யேஷ்டாபிஷேகமும், ஆவணி மாதத்தில் பவித்ரோத்ஸவமும், புரட்டாசி மாதத்தில் நவராத்திரி உத்ஸவமும், கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகைத் தீபத்திற்கு ஈசுவரரும்—பெருமாளும் சேர்ந்தாற்போல் புறப்பாடும், மாசி மாதத்தில் மகத்தன்று பெருமாள் கொள்ளிட நதிக்குத் தீர்த்த வாரிக்கு எழுந்தருளுதலும் நடைபெறுகின்றன.

சிவாலயத்தில் வைகாசி மாதம் விசாகத்தை இறுதியாகக் கொண்டு பிரம்மோத்ஸவமும், ஆனித் திருமஞ்சனத்திலும், திருவாதிரை நாளிலும் ஸ்ரீ நடராஜர் புறப்பாடும், கந்தர் சஷ்டி, பங்குனி உத்திரம் இந்நாட்களில் சுப்பிரமணியர் புறப்பாடும், தைப்பூசத்தன்று சிவபெருமான் கொள்ளிட நதிக்குத் தீர்த்த வாரிக்கு எழுந்தருளுதலும் நடைபெறுகின்றது. மாதந்தோறும் பிரதோஷமும், கிருத்திகை புறப்பாடும் நடைபெறுகின்றன. இது தவிர, ஆழ்வாராதிகள்—ஆண்டாள் திரு நக்ஷத்திரங்களும், நால்வர் திரு நக்ஷத்திரமும், ஸ்ரீ ஜயந்தி, விநாயக சதுர்த்தி, கார்த்திகை சோம வாரங்கள், மஹா சிவராத்திரி, நடராஜாபிஷேகம், அன்னபிஷேகம், தீபாவளிப் பண்டிகை முதலிய நாட்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நிகழ்கின்றன. மார்கழி மாதத்தில் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் விடியற்காலத்தில் ஒலி பரப்பப்படுகின்றன. பாவை மகாநாடுகளும் நிகழும்.

## 13. ஆலய நிர்வாகம்

இவ்வாலயம், திருச்சி, லால்குடி வட்டம் தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையிலிருந்து வந்தது. பிறகு 23—11—1937-ந் தேதியுள்ள 3138-ம் நெம்பர் உத்தரவில்

ஏற்படுத்தப்பட்ட ஸ்கீம் திட்டப்படி 1938-ம் வருஷம் பிப்ரவரி மாதம் முதல் சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் நேர் நிர்வாகத்தில் இருந்துவருகிறது. அறநிலையத்தாரால் நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரியும், மற்ற தர்மகர்த்தர்களும், கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

## 14. புராண வரலாறுகள்

இத்தலத்தின் பெருமைகளைக் குறித்துப் பிரம்மாண்ட மகா புராணத்தில் பல வரலாறுகள் சொல்லப்படுகின்றன. அவைகளுள் சில சுருக்கமாகக் கூறப்படும்.

### (1) கதம்ப வன வரலாறு

முன் பிரளய காலத்தில் உலகம் முழுமையும் உருத்திர மூர்த்தியிடம் ஒடுங்கியது, அப்பொழுது நித்தியமாகிய வேதங்கள் தங்களுக்கு இருப்பிடமில்லாதபடியால் சோமேசக் கடவுளிடம் சரணாக வந்தனவென்றும் அப்பொழுது அக்கடவுள் வேதாகம புராண சுவ ரூபங்களுக்கு அளித்த வரத்தில், தான் கரும பூமியாகிய பூலோகத்தில் அவதரிக்கப் போவதாகவும், அங்கு வேதங்கள் கதம்ப விருக்ஷங்களாகவும், ஆகமங்கள் புஷ்பங்களாகவும், இதிகாசங்கள் பழரூபங்களாகவும், புராணம் முதலியன நானாவர்ணங்களோடு கூடிய பறவைகளாகவும் விளங்கித் தமக்குக் குளிர்ந்த மனோஹரமான நிழலைக் கொடுத்துக் கொண்டிருக்குமாறு கட்டளை யிட்டனர். வேதாகமம் முதலியன அவ்வாறே வந்து கதம்ப விருக்ஷங்களாகத் தோன்றினமையின் இதற்குக் கதம்ப வனம் என்ற பெயர் உண்டாகியது.

### (2) பிரமன் வழிபட்டது

திருமாலின் நாபிக் கமலத்தில் தோன்றிய பிரமன் தன் பிதாவின் கட்டளைப்படி, பகவானின் கல்யாண குணங்களை

எல்லோருக்கும் எடுத்துச் சொல்லி வந்ததுடன் பகவானைத் தனது சத்திய லோகத்தில் வைத்துப் பூஜை செய்து வந்தார். இவ்விதம் பூஜித்து வருகையில் பிரமனின் பூஜையைச் சோதிக்க விரும்பிய பகவான் இத்தலத்துக்கு வந்து கதம்பவிருக்ஷமாக உருக்கொண்டு இருந்தார். பிரமன் பகவானைக் காணுமல் தேடிக்கொண்டு வரவே, பகவான் கதம்ப விருக்ஷத்தில் ஐக்கிய மாயிருப்பதைக் கண்டு தமது கமண்டல தீர்த்தத்தால் அபிஷேகஞ் செய்ய அத்தீர்த்தம் ஒரு குளமாக நின்றது. அங்கு பிரமதேவர் துவாதசாக்ஷரத்தினுல் பகவானை ஆராதித்து சிருஷ்டி சாமர்த்தியத்தைப் பெற்ருர். பிரம்மாவினுல் ஏற்படுத் தப்பட்ட அத்தீர்த்தத் கரையில் கதம்ப முனிவர் இறைவனை அடையவேண்டி, தம் இந்திரியங்களை அடக்கி கடுந்தவம் புரிந்து வந்தனர். இறைவனும் அவருடைய தவத்திற்கு இரங்கி காட்சியளித்து, முனிவரையும் அவ்விடத்திலேயே இருந்து கொண்டு தம்மை நித்தியபூஜை செய்யும்படி அருளினர். இதற்கிணங்க கதம்ப முனிவரும் புருஷோத்தமர் முன்னிலையில் எழுந்தருளி யிருக்கிருர். கதம்ப முனிவர் மேற்கூறிய குளக் கரையில் தவம் செய்தபடியால் அக்குளத்திற்குக் கதம்ப புஷ்கரணி எனப் பெயர் வழங்கலாயிற்று.

### (3) பெருமானும் பிரமகபாலமும்

சிவபெருமான் பிரம்மதேவனுடைய தலையைக் கிள்ளிய பொழுது, பிரம்மஹத்தி தோஷத்தால் கையில் அக்கபாலம் ஒட்டிக்கொள்ள அதன் பரிகாரத்தின் பொருட்டு பிரம்ம கபாலத்துடன் தீர்த்தயாத்திரை செய்ய வேண்டித் தேசங்கள் தோறும் சென்றும் அவரது கையிலுள்ள கபாலம் நிறையப் பிக்ஷை கிடைக்காமல் எப்பொழுதும் குறைவாகவே காணப் பட்டதால் மனக் குறையோடு சுற்றிக்கொண்டு, இக்கதம்ப தீர்த்த க்ஷேத்திரத்திற்கு வந்தபொழுது மிக்க கருணைவாய்ந்த திருமால் திருத் தேவியாரைக் கடாக்ஷித்தருள அவ்வம்மையார்

அருளால் அக்கபாலம் நிறையப்பெற்றது, பின்னும் சிவ பெருமான், தக்ஷப்ரஜாபதியை யக்ஞ தீக்ஷையின்பொழுது கொன்றதனுல் தனக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷமும், இந்த க்ஷேத்திரத்தில் நீங்கப்பெற்று இவ்விடத்திலேயே வீற்றிருக்கின்றனர்.

## (4) ஜனகரது யாகம் முடிவுற்றது

முன்னொரு காலத்தில் ஜனக மகாராஜர் தாம் தீர்த்த யாத்திரை செய்வதற்காக அரச பதவியை மந்திரிகளிடம் ஒப்புவித்துவிட்டு இக்கதம்ப தீர்த்தத்தை அடைந்தனர். அவ்விடம் தம் ஆசிரியர் கௌதமர் சொற்படி காசிபர் முதலிய ரிஷிகளை ரித்விக்காகச் செய்துகொண்டு யாகம் செய்யத் துவங்கினர். அந்த யாகத்தில் ஹவிசை நாயொன்று புகுந்து அசுத்தம் செய்துவிட்டது, அதையறியாமல் அவர்கள் யாகத்தைப் பூர்த்தி செய்யத் தொடங்கினர். ரிஷிகளுக்கு மந்திரங்களின் பிரயோகங்கள் ஒன்றுமே தோன்றவில்லை. அங்குள்ள அனைவருக்கும் யாகம் தடைபட்டதைக் குறித்துப் பெரிய கலக்கம் ஏற்பட்டது, ஜனகரும் மனம் கலங்கினுர். அனைவரும் பகவானைத் தியானஞ் செய்தனர். அவ்வமயம் ஒரு முனிவர் தம் சிஷ்யர்களுக்கு வேதாத்தியயனஞ் செய்து வைத்துக் கொண்டு, ஜனகரைப் பார்த்து, "ராஜரிஷியே நீவிர் இக் கதம்ப விருக்ஷத்தை உபாஸித்தால் உமது இக்குறை தீரும்," என்று கூறினுர். அவ்வாறே ஜனகரும் கதம்ப விருக்ஷத்தைத் துதிசெய்ய அம்மரத்திலிருந்து, "அரசனே, நீங்கள் நாயால் அசுத்தம் செய்யப்பட்ட ஹோமதிரவியங்களைக் கொண்டு ஹோமம் செய்ததால் உங்கள் புத்திக்குக் கலக்கம் உண்டாயிற்று. ஹோமதிரவியங்களைப் புதிதாகத் தயாரித்து ஹோமம் செய்தால் புத்திக்குத் தெளிவு ஏற்படும்," என்ற அசரீரி உண்டாயிற்று. அதன்படியே புதிய திரவியங்களைச் சேகரித்து ஹோமம் செய்யத் தொடங்குகையில் நல்ல நினைவு ஏற்பட அவர்கள் யாகத்தைப் பூர்த்தி செய்தனர். உடனே ஜனகர்

அந்த ரிஷி சிரேஷ்டரை வணங்கி தேவரீர் யாவர்? எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று வெண்டினர். அது கேட்டு அம் முனிவர் அக்கதம்ப விருக்ஷத்தையே பூஜித்தால் எல்லாம் புலப் படுமெனச் சொல்லி மறைந்தார். அவ்வண்ணமே கதம்ப விருக்ஷத்தைப் பூஜித்துத் துதிசெய்ய வேதத்தின் உருவாகிய அவ்விருக்ஷத்தில் விராட் புருஷஞகிய பகவான் தமது புருஷோத்தம வடிவத்தை வெளிப்படுத்தி சேஷபர்யங்கத்தில் சயனம் பூண்டு உந்தித்தாமரை மலரில் நான்முகன் வீற்றிருக்க, பிக்ஷாடன உருவத்தோடு சிவபெருமான் பக்கத்திலிருக்கத் தோன்றிய வண்ணம் காட்சியளித்தார். ஜனகரும் மற்ற மகரிஷி களும் திரிமூர்த்திகளேயும் பூஜித்துத் துதி செய்தனர். ஜனக மகாராஜர் உடனே மும்மூர்த்திகளுக்கும் ஆலயங் கட்டுவித்து விக்கிரகங்களேயும் பிரதிஷ்டை செய்து வைத்தார்.

## (5) கருடன் வழிபட்டது

ஆதிசேஷசயனஞகிய பகவான் இங்கு கதம்ப விருக்ஷமாக மாறியிருந்தபொழுது எப்போதும் பகவானுடைய பாதார விந்தத்தின் சேவையில் ஈடுபட்டுவந்த கருடன் பகவானேக் காணுது மிகவும் வருந்திப் பல இடங்களிலும் திரிந்து கடைசி யாக இவ்விடத்தில் பகவானேத் தரிசித்து வழிபடப் பெருமா னும் கருடனேத் தம்முன்னே எப்போதும் தங்கியிருக்கும்படி கட்டளேயிட கருடனும் பகவானுடைய அழகிய கோலங்களேப் பார்த்து தோத்திரம் செய்த வண்ணம் தங்கியிருக்கிருர். இதற்கு நிதர்சனமாக இக்கோயில் வைகானச ஆகம விதிப்படி அமைந்திருப்பதால் கருடன் எப்போதும் பகவானுக்கு முன்னே தங்கியிருக்கிருர். கருடனுக்குப் பெரிய திருவடி என்ற பெயரும் வழங்குகின்றது. பிரம்மோற்சவத்தில் கருடக்கொடி ஏற்றப்படு கிறது.

## (6) சத்கீர்த்திவர்த்தனன் வழிபட்டது

சத்கீர்த்திவர்த்தனன் என்ற அரசன் மகப்பேறில்லாத குறையை நீக்க இவ்விடத்தில் தவம் செய்து, புத்திரனே

அடைந்த சந்தோஷத்தினுல், ஐந்து கலசங்களையுடைய உத்தி யோக விமானத்தையும், மண்டபங்களையும், பிராகாரங்களையும் அமைத்து, பூஸ்திதிகளையும் வைத்துச் சித்திரைப் பூர்ணிமை யில் இரதோற்சவத்தையும் ஏற்பாடு செய்து நெடுங்காலம் இத் தலத்தில் வசித்து மோக்ஷமடைந்தனன்.

இப்பொழுதும் ஸ்ரீரங்கநாதர் மாசி திருப்பள்ளியோடம் 5-ம் திருநாள் அன்று இவ்வாலயத்தில் உபயம் கண்டருளி கதம்ப புஷ்கரணியில் தீர்த்தம் சாதிக்கின்றனர். திருமங்கை யாழ்வாரும், இந்த க்ஷேத்திரத்தில் வாசஞ் செய்துகொண்டு ஸ்ரீரங்கநாதருக்கு விமானம், கோபுரம், பிராகாரங்கள் முதலிய திருப்பணிகள் செய்ததாகவும் தெரிகிறது. இதற்கு அறிகுறியாகக் கதம்ப புஷ்கரணிக்கு வடபாகத்தில் நன்செய் நிலமும், அதையடுத்த தோப்பும், மண்டபமும் ஆழ்வார் தங்கி யிருந்ததால் ''ஆழ்வார் பட்டவர்த்தி'' என்ற பெயருடன் இன்றும் வழங்குகின்றன. இவை முதலான பல ஐதிகங்கள் இத்தலத்தில் நிகழ்ந்தன எனப் புராணங் கூறும்.

## (7) பிக்ஷாடனர் வரலாறு

தாருக வனத்திலுள்ள முனிவர்கள் சிவபக்தியில்லாமல் கர்மத்தாலேயே யாவற்றையும் அடையலாம் என்று எண்ணி யிருந்தனர். அவர்களுக்கு நல்லுணர்வு உண்டாக்கக் கருதிப் பெருமான் அழகிய கோலத்துடன் கண்டவர்கள் எல்லோரை யும் வசீகரிக்கும் தோற்றத்துடன் பலியேற்கும் முறையில் பிரம்ம கபாலம் கைக்கொண்டு முனிவர்களிடம் சென்றுன். தங்களிடம் வந்த பெருமானைக் கடவுள் என்றறியாமல் பெரு மானைக் கொல்லக்கருதி ஓர் யாகஞ் செய்து அதிலிருந்து பல உயிர்ப்பொருள்களை வரச்செய்து, பெருமானிடம் ஏவிக் கொல்லப் பார்த்தார்கள். பெருமான் தனது பேராற்றலால் அவைகளையெல்லாம் அடக்கியாண்டான். அந்த வேள்வி யிலிருந்து படபா என்னும் நெருப்பு வந்தது. பெருமான்

அதைத் தாங்கினன். பிறகு புலி வந்தது. புலியைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்துகொண்டான். மானும் மழுவும் வந்தன. அவைகளேயும் ஏந்திக் கொண்டான். பிறகு பாம்புகள் தோன்றின; அவைகளை ஆபரணங்களாக அணிந்தான். பிறகு மந்திரங்களை ஏவினர்கள். அவைகளை உடுக்கை வடிவத்தில் தாங்கினன். முனிவர்கள் தங்கள் செயல் பயன்படாததைக்கண்டு பெருமானிடம் பக்தி பூண்டு வழிபடலானர்கள். பெருமானும் அவர்களுக்கு ஞான உபதேசம் செய்தான். இவ்வடிவத்தில் பெருமான் மானுக்குப் புல் அளிப்பதை ஆன்மாவுக்கு ஞானேபதேசம் செய்யும் ஞான முத்திரையாகக் கூறுவர்.

'பிறங்கிய சீர்ப்பிரமன்தன் தலைகையேந்திப்
பிச்சை யேற்றுண்டுழன்று நின்றநாளோ''

அலங்கற் சடைதாழ ஐயமேற்று
அரவம் அரையார்க்க வல்லார்போலும்''—அப்பர்.

## 15. கல்வெட்டுக்களும். சிற்பங்களும்

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுச் செய்திகளிலிருந்து பழமையான சில உண்மைகளை அறியலாம். இவற்றை அரசாங்கத்துத் தென்னிந்தியக் கல்வெட்டுப் பதிவு நிலையத்தினர் நகல் எடுத்துப் பிரசுரித்துள்ளார்கள். 1902-ம் வருஷத்திய 602-ம் நெம்பர் சிலாசாசனத்தின் சுருக்கம்:— உத்தமர் கோவிலின் மத்தியிலிருக்கிற ஆலயத்தின் வடக்குச் சுவரில் உள்ளது. சோழ மன்னர் வம்சத்தைச் சேர்ந்த உடையார் ராஜாதிராஜதேவர் என்கிற ராஜகேசரிவர்மன் ஆட்சிக் காலத்தில் 30-வது ஆண்டில் நிலங்கள் தானஞ் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

சிவாலயத்தின் தென் சுவரிலிருக்கிற சிலாசாசனம் 1936-37-ம் வருஷத்திய 163-ம் நெம்பராகப் பதிவு செய்யப் பட்டதின் சுருக்கம்:—பாண்டிய வம்சத்து அரசனுகிய மாற வர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரத்தேவன் ஆட்சிக் காலத்தில் 10-வது ஆண்டில் ஏற்பட்டது. நாயனுர் சுந்தர பாண்டியதேவனுல் ராஜராஜவள நாட்டிலுள்ள பல ஆலயங் களுக்குப் பூஜைகள் முதலியவைகளுக்காகக் சில பூமிகள் அனுமதிக்கப்பட்டதாகப் பிரசுரிக்கப்பட்ட உத்தரவினுல் அரசனுடைய ஆட்சியில் 10-வது வருஷம் முதல் அமுலுக்குக் கொண்டுவந்ததாகத் தெரிகிறது. சிவாலயத்திற்கு மேல்புறச் சுவரிலுள்ள 1936-37-ம் வருஷத்திய 164-ம் சிலாசாசனமாக உள்ளது. 1523-வது சகம், பல்வா, கும்பா, 8 வியாழக்கிழமை அனுராதாவில் திருச்சிராப்பள்ளி ராஜராஜவளநாடு உள் பிரிவி லுள்ள மேல்பாலாற்றின் உள்ள கிளை முரியில் அழகிய உத்தமர் பூஜைகளுக்காக மாலையபுரம் என்கிற குணசீலமங்கலத்தில் வசிப்பவரால் விற்குடியிலுள்ள பூமியை ஸ்ரீரங்கநாதஸ்வாமி முன்னிலையில் தானம் செய்யப்பட்டதாகக் கூறுகின்றது.

சிற்பங்கள் : கோயில் அழகாகப் பெட்டகம் போன்று அமைந்துள்ளது. மூலவர் பள்ளிகொண்ட பெருமாளின் வடிவம் சிலையினுலாகியது. விமானம் உத்தியோக விமானம் எனப்படும். பிக்ஷாடனர் நடராஜர், போகசக்தியம்மன், உற்சவப் பெருமாள், நால்வர் முதலியோரின் உலோகச் சிலைகள் மிகவும் சிற்பம் பொருந்தியன. மூர்த்திகளின் பெருமைகளை விளக்கும் வகையில் துதிப்பாடல்கள் பொறித்த திருப்பாடல் கல்வெட்டுக்கள் முன் மண்டபச் சுவர்களில் பிர திட்டை செய்யப்பெற்றுள்ளன. இவை பக்தியை உண்டாக் கும் வகையில் அழகாக அமைக்கப் பெற்றுள்ளன. பக்கத்தில் புதிதாய்ச் செய்யப்பெற்ற மிகப் பெரிய துவாரபாலகர் சிலைகள் நிறுவப்பெற்றுள்ளன.

## 16. சரித்திர வரலாறு

திருச்சிராப்பள்ளி என்ற தலைப்பில் ஜில்லா கெஜட்டீரில் பிக்ஷாண்டார் கோயிலைப்பற்றிப் பிரசுரித்திருப்பதில் கீழ்க் கண்ட விவரம் கூறப்படுகிறது.

பிக்ஷாண்டார் கோயிலிலுள்ள மதில்களால் சூழப்பட்ட ஆலயமானது, கி. பி. 1751-52ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் நடந்த யுத்தத்தில் முக்கிய தளமாக இருந்தது. அதன் ஜனத்தொகை 2143 : 1751-ம் ஆண்டில் காப்டன் ஜின்ஜன் திருச்சிராப்பள்ளியில் ஒய்வு எடுத்துக்கொள்ளுமுன் இக்கோயில் தற்காலிகமாக உபயோ கித்துக் கொள்ளப்பட்டது. பின்னர் விரோதியினால் அரணக் கப்பட்டது.

1752-ம்ஸு மே-மீ 16உ மாலை 4-மணிக்குக் கிளைவ்வினால் ஸ்ரீரங்கம் தீவில் தங்கியிருந்த பிரஞ்சு சைனியம் பிக்ஷாண்டார் கோயிலில் தங்கியிருந்த சைனியத்திற்கு உதவிசெய்ய முடியாமல் தடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்து முடியுந்தருணத் தில் தீவுகளில் தங்கியிருந்த சந்தா சாஹிப் முகாம்களை ஆற்றங் கரையில் பீரங்கிகளை மறைவில் வைத்துக் குறுக்குவழியாகத் தாக்கினான். பிக்ஷர்ண்டார் கோவிலுக்கு 200 கெஜத்துக்கு வடக்கிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து பீரங்கிகளை வைத்துக் கொண்டு பிக்ஷாண்டார் கோவிலிலிருந்த சைனியத்தைத் தாக்கினான். இவ்வித தாக்குதலைப் பிரஞ்சுக்காரர்கள் எதிர் பாராததால் தைரியம் இழந்து சரணடைந்தார்கள்.

கி. பி. 1759-60-ம் ஆண்டில் பிக்ஷாண்டார் கோவிலை மறுபடியும் பிரஞ்சுக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். அப்பொழுது திருச்சியிலுள்ள பிரிட்டிஷ் சைனியங்களைக் காப்டன் ரிச்சர்டு ஸ்மித் தலைமையில் சமயபுரத்திலிருந்த சைனியங்களுடன் கலந்துகொண்டு கோவிலுக்கு 6 பர்லாங்கு

தூரத்திலுள்ள ஒரு சத்திரத்தில் பீரங்கிகளை வைத்துக் கொண்டு கோவில் தாக்கப்பட்டது.

ஆனால் கோவிலிலிருந்து கிளம்பிய தீ அதிக கடூரமாக இருந்ததால் அவர்களுடைய படைகள் தாக்க முடியாமல் போனதுடன் ஸ்மித்தினுடைய புஜத்தில் ஒரு குண்டு தாக்கி ஸ்வாதீனமில்லாமல் செய்துவிட்டது.

உத்தமர் கோயிலைத் தரிசித்தவர்கள் இதன் மகத்துவத்தையும், ஸ்தல சிறப்பையும் அறிந்து வழிபடவேண்டும். இதிகாச சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் மிக்கது இத்திருத் தலம். முச்சுடராய் விளங்கும் மூவரும் ஒருங்கு அமர்ந்த இடம் ஆதலால் உத்தமமான ஆலயமாயிற்று.

மூன்று சக்திகளும் திருக்கொலு வீற்றிருக்கும் ஆலயமும் இதுவாகும். உத்தமரைக் காணவேண்டும், உத்தமர் திருவடி சாரவேண்டும், உத்தமர் புகழ் பாடி வாழவேண்டும். இது மானிடப் பிறவி உத்தமமான வாழ்க்கையை அடைவதற்கு உத்தமமான வழியுமாகும்.

உத்தமரை தரிசித்து மகிழ்ந்தவர்களுக்கு எங்கள் நல் வாழ்த்து. இதுவரை தரிசிக்காதவர்கள், உத்தமரைக் காணோமா என்னும் ஏக்கம் கொண்டு வாடவேண்டாம். வாருங்கள் உத்தமர் திருக்கோயிலை நோக்கி என அன்புடன் அழைக்கின்றோம்.

---

# துதிப் பாடல்கள்

## விநாயகர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## முருகன்

மூவிரு முகங்கள் போற்றி
முகம் பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னன்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி,

## நடராஜர்

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## சிவபெருமான்

குலந்தரும் நீதிமிக்க குணந்தரும் வேதஞ்சொல்லும்
பலந்தரும் உயர்ந்த சாயுச்சியந்தரும் பழுதிலாத
தலந்தரும் எல்லாம்வல்ல சயந்தரும் நிறைந்த செல்வ
நலந்தரும் பெருமைகுன்ரு நயந்தரு நமச்சிவாய.

## தேவி

கண் களிக்கும் படிகண்டு
கொண்டேன் கடம்பாடவியில்
பண் களிக்கும் குரல் வீணையும்
கையும் பயோதரமும்
மண் களிக்கும் பச்சை வண்ணமு
மாகி மதங்கர் குலப்
பெண் களில் தோன்றிய எம்
பெருமாட்டிதன் பேரழகே.

## தக்ஷிணாமூர்த்தி

துய்ய கரமலராற் சொல்லாமற் சொன்ன உண்மை
ஐயனைக் கல்லால் அரசை யாமணைவ தெந்நாளோ?

## அடியார் பெருமை

உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்
அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய்
பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம்
முன்னின்றே.

—திருவாசகம்

## நால்வர்

பூழியர் கோன் வெப்பொழித்த
புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல் மிதப்பில்
அணைந்த பிரான் அடிபோற்றி
வாழி திரு நாவலூர்
வன் தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்
திருத்தாள் போற்றி.

# திருமால் துதிப் பாடல்கள்

என் திருமார்பன் தன்னை
யென் மலைமகள் கூறன்றன்னை
என்றுமென் நாமகளை
யகம்பால் கொண்ட நான்முகனை
நின்றசசி பதியை நிலங்கீண்
டெயில்மூன்றெரித்த
வென்றுபுலம் துரந்த
விசும்பாளியைக் காணேனே.

—நம்மாழ்வார்.

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

—திருமங்கையாழ்வார்,

பச்சைமா மலைபோல்மேனி
பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தங் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்

## அனுமான்

அஞ்சிலே யொன்று பெற்ருன்
அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்ருருக
ஆரியர்க்காகவேகி
அஞ்சிலே யொன்று பெற்ற
அணங்கு கண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றைவைத்தான்
அவனம்மை அளித்துக் காப்பான்.

—கம்பர்

## கருட சேவை

கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின் மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினன்.

## திருப்பாவை

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்குபெருஞ் செல்நெல்லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதேபுக் கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல்பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.

## பிக்ஷாடனர்

அடியிற் றெடுத்த பாதுகையும்
அசைந்த நடையுமிசை மிடறும்
வடிவிற் சிறப்ப நடந்தருளி
மூழை ஏந்தி மருங்கணைந்த
தொடியிற் பொலி தோள் முனிமகளிர்
சுர மங்கையரை மயல் பூட்டிப்
படியிட் டெழுதாப் பேரழகால்
பலிதேர் பகவன் திருவுருவம்.

—காஞ்சிப் புராணம்

## பிரமன்

வலமலியு மத்திரஞ் சத்திர முதற்பல
வயப்படைக்குப் படையெனும்
வாக்காயுதங் கொண்டு தான் கொண்ட வைதீக
நன் மாண்பினுக் கேற்ப நாளும்
நலமலியும் வெண்மணி வடங்கையிற் றாங்கவெண்
நகையனைய வுருவமேனி
நாயகி மணந்து வெள்ளோதிம நடாத்துமொரு
நான்முகக் கடவுள் காக்க.

—மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

## சரஸ்வதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

—கம்பர்



கண்ணன் அச்சகம், திருச்சி-2.